முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.11/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.41/2022**

அய்யனார் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. கருத்தப்பாண்டியன்
2. சார்பதிவாளர் – கரிவலம்வந்தநல்லூர்
3. கருத்தபாண்டி
4. முருகேசன்
5. கற்பகவள்ளி
6. சுந்தரத்தாய்
7. விநாயகமூர்த்தி
8. வேல்ச்சாமி
9. முத்துலட்சுமி ..... 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
10. முருகன் ..... 10ம் எதிர்மனுதாரர்/உத்தேச 10ம் பிரதிவாதி
11. தமிழ்நாடு அரசு அதன்
தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்
12. ஊராட்சிமன்ற தலைவர்,
சத்திரகொண்டான் ஊராட்சிமன்றம் ..... 11, 12 எதிர்மனுதாரர்கள்/
உத்தேச 11, 12 பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.08.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 2, 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.L.பரமசிவன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.லட்சுமணன் அவர்கள் ஆஜராகியும், 10ம் எதிர்மனுதாரர்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.08.11 18:18:36 +0530

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 12 எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1, விதி 10(2) மற்றும் பிரிவு 151ன்படி, இவ்வழக்கில் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொண்டு இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கை மனுதாரர் பிரதிவாதிகள் மீது வலியுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் பிரதான 1ம் பிரதிவாதி தற்போது இவ்வழக்கின் விசாரணையின்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி 2ம் தபசில் 6ம் அயிட்ட சொத்தினை 10ம் எதிர்மனுதாருக்கு 25.04.2011 தேதியில் பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதேபோன்று 2ம் தபசில் சொத்துக்களில் சாலை அமைக்க 1ம் பிரதிவாதி கடந்த 02.03.2011 தேதியில் மேதகு. தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு நன்கொடை ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளதாகவும், கட்சி செய்து இவ்வழக்கிற்கு 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் அவசிய கட்சி எனவும் கட்சி செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வில்லங்க பாராதீன விபரங்கள் மேற்படி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு மனுதாருக்கு தெரியவருகிறது என்றும், மேற்படி 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் மேற்படி 1ம் பிரதிவாதியின் கட்சியின் பெயரில் இவ்வழக்கிற்கு அவசிய கட்சிகள் என்பதாலும், மேற்படியார்களை அவசிய கட்சிகளாக இவ்வழக்கில் கட்சி சேர்க்காவிடில் இவ்வழக்கு அவசிய கட்சியை சேர்க்காத தோஷத்திற்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.11 18:18:43 +0530

ஆட்பட்டுவிடக்கூடும் என சட்ட ஆலோசனை கிடைத்துள்ளதாலும், இவ்வழக்கிற்கு 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து கொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகையால், இவ்வழக்கில் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொண்டு இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது இவ்வழக்கில் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொண்டு இவ்வழக்கை மேல்நடத்திக் கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக வலியுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) இவ்வழக்கில் உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளை வழக்கில் கட்சியாகச் சேர்க்காதது தொடர்பாக 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையில் ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கில் எழுந்துள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் முழுமையான

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.08.11 18:18:50 +0530

மற்றும் பயனுள்ள தீர்வு காணவும், எதிர்காலத்தில் இதே பிரச்சனை குறித்து தேவையற்ற பல்வேறு வழக்குகள் உருவாகுவதைத் தவிர்க்கவும், உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளை இவ்வழக்கில் கட்சியாகச் சேர்ப்பது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) மேலும், உத்தேச 10 முதல் 12 பிரதிவாதிகளை கட்சியாகச் சேர்ப்பதன் மூலம் அசல் வழக்கின் தன்மையிலோ அல்லது கோரப்பட்டுள்ள பரிகாரங்களிலோ எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அவர்களுக்கும் தங்களது நிலைப்பாட்டை உரிய முறையில் முன்வைக்கும் வாய்ப்பு கிடைக்கும். மேலும், இம்மனுவிற்கு எதிராக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படாமல் "No Counter" என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

9) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10(2)–ன்படி, வழக்கின் எந்த நிலையிலும் முழுமையான மற்றும் பயனுள்ள தீர்மானிப்பிற்குத் தேவையான நபரை கட்சியாகச் சேர்க்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மனு தாமதமாக வா.சா.2ன் குறுக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் மட்டும் அதனை நிராகரிக்க இயலாது.

10) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

11) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.11 18:18:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**</u>

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.11 18:19:02 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.11/2026
in
O.S.No.41/2022
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 11.08.2026**